**செய்தி வெளியீடு எண் : 57** **நாள்: 24.09.2026**

# தமிழ்நாடு, மக்கள் மாளிகையில் அக்டோபர் 11, 2026 (ஞாயிற்றுக்கிழமை) முதல் அக்டோபர் 20, 2026 (செவ்வாய்க்கிழமை) வரை நடைபெறும் 'நவராத்திரி கொலு - 2026' கொண்டாட்டங்களில் பார்வையாளர்களாக பங்கேற்க பொதுமக்களுக்கான கனிவான அழைப்பு

தமிழ்நாடு, மக்கள் மாளிகையில் 'நவராத்திரி கொலு - 2026' அக்டோபர் 11, 2026 (ஞாயிற்றுக்கிழமை) முதல் அக்டோபர் 20, 2026 (செவ்வாய்க்கிழமை) வரை கொண்டாடப்பட உள்ளது. இவ்விழாவினை மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், அவர்கள் அக்டோபர் 11, 2026 அன்று, சென்னை, மக்கள் மாளிகையில் தொடங்கிவைக்க உள்ளார்கள்.

தினமும் மாலை 04:00 மணி முதல் 05:00 மணி வரை நடைபெற உள்ள வழிபாடு நிகழ்ச்சியிலும் மற்றும் மாலை 05:00 மணி முதல் 06:00 மணி வரை நடைபெற உள்ள கலாச்சார நிகழ்ச்சிக் கொண்டாட்டங்களிலும் தனிநபர்கள், பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் பார்வையாளர்களாக கலந்து கொள்ளலாம்.

ஆர்வமுள்ள தனிநபர்கள், பொதுமக்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் பின்வரும் இணையதள இணைப்பு https://tnlokbhavantour.tn.gov.in/navaratri/ மற்றும் QR குறியீடை பயன்படுத்தி அக்டோபர் 5, 2026 க்குள் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பதிவுகளில் தங்களது பெயர், வயது, பாலினம், முகவரி, கைபேசி எண், மின்னஞ்சல் முகவரி மற்றும் வருகைக்கான முன்மொழியும் தேதி போன்ற விவரங்கள் இருக்க வேண்டும்.

**'முதலில் வருவோருக்கு முன்னுரிமை'** என்ற அடிப்படையில் ஒவ்வொரு நாளும் அதிகபட்சமாக 200 பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தேதியையும், நேரத்தினையும் உறுதிப்படுத்தும் மின்னஞ்சல் அனுப்பப்படும். பார்வையாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்திற்கு குறைந்தது 30 நிமிடங்களுக்கு முன்னதாக, ஹோட்டல் லெமன் ட்ரீ எதிர்ப்புறம் அமைந்துள்ள மக்கள் மாளிகை இரண்டாம் (2)-ஆம் நுழைவாயில் வழியாக வந்தடைய வேண்டும். தங்களுக்கு அனுப்பப்பட்ட உறுதிப்படுத்திய மின்னஞ்சலின் நகல் மற்றும் அசல் புகைப்பட அடையாளச் சான்றினை உடன் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நவராத்திரி கொலு கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்கான எந்தவொரு கோரிக்கையையும் நிராகரிக்கும் உரிமையை தமிழ்நாடு மக்கள் மாளிகை கொண்டுள்ளது.

---

**மக்கள் மாளிகை, சென்னை-22** **வெளியீடு :-**
**நாள்: 24.09.2026** **மக்கள் தொடர்பு அலுவலகம்**